1973 ஆகஸ்ட் 4]

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நம்பிக்கையில்லாத தீர்மானத்தின்மீது விவாதம் 7 ஆம் தேதி எடுத்துக் கொள்ளப்படவிருப்பதாலும், அனைத்துக் கட்சியிலே உள்ளவர்களும் அவ்வப்பொழுது ஏற்படும் பிரச்சினைகளைக் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்களை இங்கே வைப்பதற்கு வழிவகை செய்யப்பட வேண்டுமென்று கூறுகின்ற அந்த யோசனையை மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் ஏற்றுக் கொள்ளலாம் என்றுதான் நான் கருதுகிறேன். உடனடியாக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளப் போவதில்லை, 7 ஆம் தேதிதான் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. ஆகவே, இடைப்பட்ட காலத்தில் இவைகளை எடுத்துக்கொள்வதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்க முடியாது என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. (அ) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த நிகழ்ச்சி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தையும் எடுத்துக்கொள்வதற்குப் போவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய வேண்டியிருக்கிறது. இப்பொழுது திரு பி. வெங்கடசாமி அவர்கள் "This House expresses its want of confidence in the Council of Ministers headed by Hon. Dr. M. Karunanidhi." என்ற ஒரு தீர்மானத்தின் மூலம் அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவித்து ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜேம்ஸ் அவர்கள், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், திரு. சுப்பு அவர்கள், திருமதி அனந்தநாயகி அவர்கள் ஆகியோரும் கொடுத்திருக்கிறார்கள். முதலிலே திரு. வெங்கடசாமி அவர்கள் கொடுத்திருக்கும் தீர்மானத்திற்கு, இந்த அவையிலே அதை முன்மொழிய அனுமதி இருக்கிறதா என்று பார்த்து, அனுமதி கிடைத்தால் அடுத்து வரும் தீர்மானங்களுக்கு அனுமதி கொடுக்காமல் அந்த ஒரு தீர்மானத்தை எடுப்பது என்ற முறை

[பேரவைத் தலைவர்] [1973 ஆகஸ்டு 4

பின்பற்றப்படுகிறது. முதலில் திரு. பி. வெங்கடசாமி அவர்களின் தீர்மானத்திற்குப் பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அனுமதி அளிக்க விரும்பும் உறுப்பினர்கள் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[காங்கிரஸ் (அமைப்பு), அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சுதந்திரா ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 55 (2)-வது விதியின்படி தேவையான 24 உறுப்பினர்களுக்கு மேல் எழுந்து நிற்பதால் இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கப்படுகிறது என்று அறிவிக்கின்றேன். மற்ற தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட வில்லை.

4. (ஆ) அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம், மூன்று உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, திருநாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஆர். பொன்னப்ப நாடார், ஏ. ஆர். மாரிமுத்து கொடுத்திருக்கிறார்கள். அதாவது, திருவாளர்கள் கே.டி.கே. மணி அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தைக் கொடுத்திருக் கிறார்கள்—

"This House disapproves the policy of the Ministry which led to high prices of essential articles of life and to food crisis invoking widespread agitation."

முதலில் அறிவிப்பு கொடுத்திருக்கும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய தீர்மானத்திற்கு அனுமதி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதற்கு ஆதரவாக உள்ள உறுப்பினர்கள் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[காங்கிரஸ் (அமைப்பு), அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சுதந்திராக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.]

1973 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 55 (2)-வது விதியின்படி தேவையான 24 உறுப்பினர்களுக்கு மேல் எழுந்து நிற்பதால் இத் தீர்மானத்திற்குப் பேரவை அனுமதி அளிக்கிறது என்று அறிவிக்கின்றேன்.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தையும்

(இ) அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தையும் எடுத்துக்கொள்வது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த இரண்டு தீர்மானங்களும் அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்படி 7—8—1973 செய்வாய்க்கிழமை முதல் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(5) விளக்கம் கோரல்.

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் அறிவிப்பு கொடுத்தவர்களுக்கெல்லாம் பதிலளிக்கும் உரிமை வழங்கப்படுமா என்பது குறித்து.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of clarification, Sir. As per Rule 55 (1) a motion expressing want of confidence in the Ministry or a motion disapproving the policy of Government in a particular respect may be made with the consent of the Hon. Speaker and subject to the following restrictions therein, etc.

Now there is the " No-Confidence Motion " and " Disapproval Motion ". Persons who have given " disapproval Motion " disapproving the policy of Government in a particular respect, have the right of reply. But I would like to make a request to the Hon. Speaker. " No-Confidence Motion " is greater in scope than disapproving the policy of Government in a particular respect. So, persons who have given notice of " No-confidence Motion ", which is greater in scope than " Disapproval Motion " should have also the chance of replying to the debate. That is my humble submission. They should be given the right of reply. The Hon. Speaker may pay his attention to this request of mine and see that justice is done.